மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதற்கான முழுப் புள்ளி விவரம் இல்லை. என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், 12,000 'ரூரல் ரேடியோ ஃபாரம்ஸ்' நல்லமுறையில் செயல்பட்டு வருவதாக அறிகிறேன்.

நகராட்சிகள்

* 254 வின.—**திரு. என். எஸ். வி. சித்தன்** : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை நகரசபைத் தலைவர் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டாரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

* 255 வின.—**திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் நகராட்சி நிர்வாகத்தின் மீது புகார் மனுக்கள் ஏதேனும் அண்மையில் அரசுக்கு வந்துள்ளனவா ?

(இ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Corporation Council Elections

* 256 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether walls of a Corporation High School were demolished in connection with the location of voting booths for Madras Corporation Council elections in 1968?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம். எழு உயர்நிலை பள்ளிகளில்.

திருச்சிராப்பள்ளியில் புதைச் சாக்கடைத் திட்டம்

* 257 வின.—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

1969 செப்டம்பர் 12]

திருச்சி பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிதி திரட்டும் வகையில் லாட்டரி சீட்டு நடத்த திருச்சி நகர சபையில் இருந்து அனுமதி கோரி தமிழக அரசுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு எவ்வளவு ரூபாய் மதிப்பீடு போடப் பட்டிருக்கிறது ? இதுபற்றி திருச்சி நகராட்சி ஆணையாளரிட மிருந்து ஏதாவது அனுமதி வேண்டுமென்று குறிப்புகள் அரசாங்கத்திற்கு வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு நிதி திரட்டும் வகையில் பரிசு சீட்டு நடத்த அனுமதி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது மறுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு விவரம் இல்லை.

திரு. மு. ச. சிவசாமி : தலைவரவர்களே, நகராட்சி மன்றங்கள் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க ஷெட்யூல் பாங்குகள் தனிப்பட்ட முறையில் நகராட்சிக்குக் கடன் வழங்க முன் வந்திருக்கின்றன. இதற்கு நமது அரசாங்கம் நகராட்சிகளுக்கு அனுமதி கொடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படிப்பட்ட பிரச்சினைகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டால், பரிசீலித்து, அனுமதி கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டங்களை நகரங்களில் நிறைவேற்று வதற்கு எல்.ஐ.சி.-யிடமிருந்து கடன் உதவி கேட்பதாக முன்பு திட்டம் இருந்ததே, அது கைவிடப்பட்டதா, அல்லது அதுபற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : குடி நீர் வழங்கல், பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்றவைகளுக்கு எல்.ஐ.சி.-யை அணுகி அரசாங்கம் உதவி கேட்டிருக்கிறது. அவர்களும் கணிசமான தொகை தருவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஆர். நாகசுந்தரம் : திருச்சி புதை சாக்கடைத் திட்டம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ? இந்த திட்டத்தை நீண்ட நாட்களாக மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசு இந்தத் திட்டத்தை எப்பொழுது எடுத்துக்கொள்ளும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அதுபற்றிய விவரம் இல்லை. தனிக்கேள்வி போடவும்.